<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் கணபதி என்பவரிடமிருந்து 06.04.2015 அன்று பிளாட் நம்பர்.35, புவனேஸ்வரி நகர், சர்வே எண்.317/1, டவுன் சர்வே நம்பர்.1, வேளச்சேரி கிராமத்தில் 2400 சதுர அடி கொண்ட மனை நிலத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் முதல் சான்றொப்ப சாட்சியாக சந்திரபோஸ் என்பவர் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனையை நான் மற்றொரு நபருக்கு பொது அதிகார பத்திரம் வழங்கி அவர் மூலம் கிரயம் கொடுத்து விட்டேன். அவ்வாறு இளங்கோவன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கிரயம் கொடுத்த விவரம் வில்லங்க சான்றிதழில் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இளங்கோவன் மாதுரிதேவி என்பவருக்கு ஒரு மனையை கிரயம் கொடுத்தார் என்றால் கிரயம் பெற்றவர் விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயம் கொடுத்த பின்னா் கிரய தொகையை எனக்கு இளங்கோவன் கொடுத்துவிட்டார் என்றால் இன்னும் கணக்கை முடிக்கவில்லை. 2015ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரையுள்ள வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் இந்த வழக்கிற்கு அது தேவையில்லை. நான் மேற்படி மனையை விற்று பெற்ற பணத்தில் தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் இல்லை. அவ்வாறு கிரய தொகை எனக்கு வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், அதனை இந்த வழக்கில் காட்டாமல் மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.4 கடிதம் சந்திரபோஸ் என்பவருக்கு அனந்தகிருஷ்ணன் எழுதியதாக காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு நான் எந்த கடிதமும் அனுப்பவில்லை. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதில்லை. மேற்படி 15.04.2015 தேதியிட்ட கிரய பத்திரத்தில் உள்ளது என் கையொப்பமா என்றால் அது ஒளி நகல் என்பதால் என்னால் சொல்ல இயலாது. ஆனால் என் கையொப்பம் போல உள்ளது. வழக்குரையில் இருப்பது என் கையொப்பம் தான். வழக்குரை, கிரய பத்திரம் மற்றும் பி.சா.ஆ.4 ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடைய கையொப்பங்கள் தான் என்றும், நான் பிராதிலும், மேற்படி கிரய பத்திரத்திலும் கையொப்பங்களை மாற்றி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4-ல் உள்ள கையொப்பமும் என்னுடைய கையொப்பம் தான்

என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் ரூபாய் 20 லட்சம் கடன் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அதனை ஆண்டு வருமான கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் எனது தணிக்கையாளர் காட்டியிருப்பார். அந்த ஆண்டு வருமான வரி கணக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் அவர் விதிமுறைப்படி தாக்கல் செய்திருப்பார். இந்த தொகை காட்டப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. அந்த ஆண்டு வருமான வரி கணக்கை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். அந்த தொகையை நான் வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றும், அதனால் தான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை